## 5.1 திட்டங்கள் – பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் (சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா) – மைய அரசின் வழிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசாணை (நிலை) எண் 22 நாள் : 2.3.1998

பார்வை :

இயக்குநர், மைய அரசு, நகர்ப்புற மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
நேர்முக கடித எண் கே/11019/103/97 நாள் : 11.9.97.

**ஆ ணை**

மைய அரசின் உதவியுடன் தற்போது செயல்பட்டு வரும் நகர்ப்புற அடிப்படை வசதித் திட்டம், நேரு வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பிரதம அமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைந்த நிர்வாக நலன் கருதி 1–2–97 முதல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா) என்ற பெயரில் மைய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

2. மைய அரசின் இத்திட்டம் கீழ்கண்ட முக்கிய அம்சங்களை கொண்டதாக இருக்கும் –

1. இ,த்திட்டத்திற்கு மைய மற்றும் மாநில அரசளவில் 75.25 என்ற அடிப்படையில் நிதி உதவி செய்யப்படும்.

2. இத்திட்டம் நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய இரண்டு சிறப்பு திட்டங்களை கொண்டதாக இருக்கும். மேலும் நகரங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்தின்கீழ் சமூக அமைப்புகளை உருவாக்கி அம்மக்களுக்கு தேவையான நலத் திட்டங்கள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் வாயிலாக நடைமுறைப்படுத்துவதை இத்திட்டம் முற்றிலுமாக நம்புகிறது.

3. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டமானது சமூக அமைப்புகள் அதிகாரம் அடைதல் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்த திட்டமாகும். பாரம்பரியமாகத் திட்டங்கள் மேலிருந்து கீழாகச் செயலாக்கப்படும் நம்பிக்கையிலிருந்து மாறுபட்டு. சமூக அமைப்புகளை நிறுவி அவற்றை மேம்பாடு செய்து அவற்றின் வாயிலாக வசதிகளையும் வளர்ச்சிகளையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குட்பட்ட பகுதிகளுக்குச் செய்து தருவதையே இத்திட்டம் நம்புகிறது. இந்த இலக்கினை அடைய சமூக அமைப்புகளாகிய அண்டை வீட்டுக் குழுக்கள் மற்றும் சமுதாய வளர்ச்சி சங்கள் ஆகியவற்றை ஏழை மக்கட்கான அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்தன் முறையில் இலக்குக்குட்பட்ட பகுதிகளில் அமைக்க வேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து உதவிகள், கடன் தொகையை மேற்பார்வையிட்டு வசூல் செய்தல், விண்ணப்பங்களைத் தயார் செய்தல் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றைச் செய்ய சமுதாய வளர்ச்சி சங்கங்களே மையங்களாகச் செயல்பட வேண்டும். அந்தந்தப் பகுதிகட்குப் பொருத்தமான நல்ல பல திட்டங்களை தெரிவு செய்யும் பணிகளையும் சமுதாய வளர்ச்சி சங்கம் செய்ய வேண்டும்.

4. இத்தகைய சமுதாய வளர்ச்சிச் சங்கங்களே சிக்கனம் மற்றும் நாணயச் சங்களாகவும் செயல்பட்டு சமூகத்தில் சிறு சேமிப்பு போன்ற இதர குழு வளர்ச்சிப் சங்கத்திலிருந்து கடன் மற்றும் நிதி வழங்கும் சங்கம் தனியாகவும் நிறுவலாம். அந்தந்த உள்ளாட்சிப் பகுதிகளில் நிதி நிறுவனங்களின் வாயிலாக

விரிவாக்க நிதி பெருக்கும் முயற்சியினை இணைக்க இந்த அமைப்புகள் முயற்சி செய்யும். சங்கங்களைப் பதிவு செய்யும் சட்டம் அல்லது வேறு உரிய சட்டங்கள் வாயிலாக இந்த அமைப்புகள் பதிவு செய்யப்பட்டு, அவைகளே பல்வேறு நலத் திட்டங்களுக்கு நேரடியாக மிகுந்த நிதியுதவியினை பற்று வரவு அடிப்படையில் செய்ய இந்த அமைப்புகளால் செய்ய இயலும். பல சமூக சங்கங்களின் இணையமாகத் திகழும் இச்சமுதாய நலச்சங்கமே இத்திட்டத்திற்கு ஏற்ற இணைப்பு முகமையாகத் திகழும். பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக ஒவ்வொரு பகுதிகளிலும் செயல்படுத்தப்படும் பணிகளோடு இணைத்தும் அவர்கள் வசிக்கும் குறிப்பிட்டதொரு பகுதியிலேயே அனைத்தையும் செயல்படுத்த வேண்டுமென அவர்கள் எதிர்பார்ப்புடன் வலியுறுத்தினாலும் அப்பணிகள் கல்வி, சமூக நலம், உடல் நலம் பற்றியவை என்ற வரம்பினையும் கடந்து செயல்படுத்தப்படும்.

5. நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இந்த திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது,

(அ) நகர்ப்புறத்தில் வசிக்கும் தனி நபர் ஏழைப் பயனாளிகளுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல்.

(ஆ)நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழைப் பெண்கள் குழுவிற்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல். இத்துணைத் திட்டத்திணை நகர்ப்புறத்தில் வசிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டம் என்றும் அழைக்கலாம்.

(இ பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்தல், திறமையும் வலிமையும் மிக்க பயனாளிகள் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களில் பங்கு பெறும் மற்றவர்கள் ஆகியவர்களை மேம்பாடு செய்து அவர்களிடையே உள்ள சிறு தொழில்கள் முனையும் திறமையை வளர்த்துக் கொள்ள உதவி புரிதல்.

6. இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் (அதாவது 1991 – 92 ஆம் விலைவாசி அடிபபடையில் ஆண்டு வருமானம் ரூ11850/– க்கும் கீழே உள்ளது) நகர்ப்புற ஏழை மக்களுக்கு செயல்படுத்தப்படும் பென்சன். பழங்குடியினர் மலைவாழ் மக்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப் படும் பெண்களுக்கு குறைந்தபட்சம் 30 விழுக்காடு நீட்டிக்கப்படும். உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனடைவோருக்கு அடிப்படை கல்வித்தகுதி எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும் பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டத்திற்கும் இப்புதிய பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் சுய வேலை வாய்ப்பு பெறுவதில் கல்வித் தகுதியில் வேறுபாடு உண்டு என்பதற்காக 9ஆம் வகுப்பிற்கு மேல் படித்தவர்களுக்கு இப்புதிய திட்டம் பொருந்தாது என்ற கொள்கை வகுக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயனடைவோருக்கு இக்கல்வி வரம்பினை கடைப்பிடிக்க வேண்டியதில்லை பயனாளிகளை தேர்ந்தெடுப்பதற்கு நகாப்புற வறுமை ஒழிப்பு பிரிவு மற்றும உள்ளாட்சி நிறுவனத்தால் வழி நடத்தப்படும் சமுதாய நலச்சங்கம் ஆகியவை ஈடுபடுத்தப்படும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்கள் மற்றும உள்ளாட்சிப் பகுதிகளில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பெண்கள் தலைமை ஏற்று நடத்தும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் சிறு தொழில் நிறுவ உயர்ந்தபட்சமாக ரூ.50000/ – நிதி உதவி அளிக்கப்படும். இத்தொகையில் 15 விழுக்காடு அதாவது ரூ 7500/ – மான்யமாக வழங்கப்படும். பயனாளிகள்

பங்குத் தொகையாக அத்திட்ட மதிப்பீட்டில் 5 விழுக்காடு செலுத்த வேண்டும். ஆண்களும் பெண்களுமாக ஒன்றுக்கும் மேற்பட்டோர் இணைந்து குழுக்களாக இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பினால் ஒவ்வொரு பயனாளியும் திட்ட மதிப்பீட்டில் 5 விழுக்காடு செலுத்த வேண்டும். மான்யத் தொகையாக ஒவ்வொரு பயனாளிக்கும் 15 விழுக்காடு வழங்கப்படும்

7. நகர்ப்புற கூலி வேலைவாய்ப்பு திட்டம்

சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் உள்ள பொதுச் சொத்துக்களை கட்டுவதற்குத் தேவையான உடல் உழைப்பை வறுமைக் கோட்டிற்கும் கீழே வசிக்கின்ற நகர்ப்புற ஏழை மக்களிடமிருந்து பெற்று, அப்பயனாளிகட்கு இத்திட்டத்தின் வாயிலாக கூலி வேலைவாய்ப்பினை இத்திட்டம் தோற்றுவிக்கிறது. 1991ஆம் ஆண்டு மக்கட்தொகைப்படி 5 இலட்சம் வரை உள்ள நகரங்களல் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பொருடகள் மற்றும உழைப்பு ஆகியவற்றின் விகிதாச்சாரம் 60 : 40 ஆக பேணப்படும். தேசிய குடிசைப்பகுதிகள் அபிவிருத்தித் திட்டமும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டமும் இத்திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும். மேற்குறிப்பிட்ட திட்டங்கள் உள்ளாட்சி நிறுவனங்களின் பொதுவான கட்டுப்பாட்டிற்குள்ளும். மேற்பார்வைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

8. திட்ட நிர்வாகம்

2000 குடும்பங்களுக்கு ஒரு சமுதாய அமைப்பாளர் தேர்நதெடுக்கப்படுவார். இவர் கூடுமானவரையில் பெண்ணாக இருக்க வேண்டும். இவர் முழு நேர பணியாளராக இருப்பார். திட்டங்களை செயல்படுத்துவதில் இவர் முழு பொறுப்பு வகிப்பார். மாவட்ட அளவில் ஒரு திட்ட அலுவலர் பணிகளை மேற்பார்வை செய்வார். மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின் கீழ் இவர் செயல்படுவார். இந்த மாவட்டட வளர்ச்சி முகமை சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் அல்லது அதற்குரிய ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும். மாவட்ட அளவில் நகர்ப்புற ஏழ்மையை அகற்றும் கொள்கையை வளர்ந்த நகரம். பெருநகரம் மற்றும் மாவட்ட அளவில் தகவல் தொடர்பு மற்றும் அச்சம்பவங்களை பணிந்து கொள்ளுதல் மற்றும் திட்டங்களை மேலாய்வு செய்தல் ஆகிய பணிகளை இவர் மேற்கொள்ள வேண்டும்.

9. மாநில அளவில் நகர்ப்புற வளர்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்படும். இதற்குத் தலைவராக மாநில அளவில் முழுநேர அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுவார். மாநில நகர்பபுற வளர்ச்சிக் கழகம் மாநில அரசின் அனைத்து வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கும் இணைப்பு முகமையாக அமைக்கப்படும். இக்குழுமம் திட்டங்களை மேலாய்வு செய்து தேவையான கொள்கை முடிவுகளை எடுக்கும். இந்த

முகமை சங்கங்களின் பதிவு சடடத்தின் கீழ் அல்லது ஏதேனும் ஒரு அதற்குரிய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

**3.** நகராட்சி நிர்வாக ஆணையர் மேற்படி வழி முறைகளையும் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**4.** இவ்வாணை பெற்றமைக்கு ஒப்புகை அளிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்